# மத்திய சுற்றாடல் அதிகார சபை

## சுற்றாடல் அமைச்சு

**CEA/AD/Proc/GEN/08/2023**

# 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல்

2024ஆம் வருடத்தில் பொருட்கள் வழங்குதல், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு மதிப்பிற்குரிய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்களை அழைப்பதில் மத்திய சுற்றாடல் அதிகார சபை மகிழ்ச்சியடைகின்றது.

ஒவ்வொரு உப வகுதிக்கும் (பொருட்கள், சேவைகள் அல்லது வேலைகள்) மீளளிக்கப்படாத கட்டணமொன்றாக 1000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். இல்லாவிடில் இலங்கை வங்கியின் பெலவத்த கிளையில் 0002937303 எனும் நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பெயரில் வரவு வைக்கப்பட்டு பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

வகுதிகள், விண்ணப்பப் படிவங்கள், இயைபுடைய வடிவம் மற்றும் வழிகாட்டிகள் என்பவற்றை 2023-11-28ஆம் திகதி முதல் 2023-12-28ஆம் திகதி வரையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணையதளத்தின் (**www.cea.lk**) என்பதன் கீழ் "Procurement Notices" section - Registration of Suppliers 2024 என்பதில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

சகல விண்ணப்பப்படிவங்களும் பூர்த்தி செய்யப்பட்டு வியாபாரப் பதிவுச் சான்றிதழ், VAT பதிவுச் சான்றிதழ், CIDA பதிவுச் சான்றிதழ் (பொருத்தமாகவிருந்தால்) மற்றும் தேசிய ஆவணக் காப்பக பதிவு (பொருத்தமாகவிருந்தால்) என்பவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை 2023-12-28ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் - 2024'' எனத் தெளிவாகக் குறிப்பிடவும்.

பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பணிப்பாளர் (நிர்வாகம்),**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**''பரிசர பியச'',**
**இல.: 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2872278, 011-2124623**